SC.No. 138/18
PW – 3
11.07.2025
பெயர் : மாரிகண்ணு
க/பெ. : செல்வம்

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சாட்சி சித்திரகண்ணு எனக்கு கொழுந்தன் உறவுமுறை ஆவார். அவர் எங்கள் வீட்டின் ஒரு பகுதியில் குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். இந்த விபரத்தை நான் என்னுடைய போலிஸ் விசாரணையின்போது கூறினேன். எனது வீட்டிற்கு அடுத்து பத்தடி தூரத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் உள்ளது. சத்தம் கேட்டுதான் நான் வீட்டிலிருந்து வெளியே வந்தேன். அந்த சமயத்தில சித்திரகண்ணுக்கும் எதிரிகளுக்கும் வாய் தகராறு நடந்தது. எனது வீட்டிற்கு செல்லும் பாதை அருகில் இருந்த நான்கு வீட்டிற்கு செல்லும் பொது பாதை ஆகும். சம்பவம் நடைபெற்று கால் மணிநேரத்திற்குள் போலிசார் அங்கு வந்துவிட்டார்கள். காவல் நிலையத்திற்கு சென்று நான் தான் தகவல் சொன்னேன். நான் தகவல் சொன்ன விபரத்தை போலிஸ் விசாரணையின் போதும் கூறினேன். என்னிடம் போலிசார் கையெழுத்து எதுவும் வாங்கவில்லை. 14.06. தேதியில் இரவு 8.15 மணியளவில் போலிசார் என்னை விசாரித்தார்கள். அதன்பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் எனது கணவர் மற்றும் மாமியாருடன் ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அன்றைய தேதியிலேயே புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். இடம் சம்மந்தமாக எனது கணவருக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை இருந்தது. சம்பவத்தின்போது எனது மாமனார் உயிருடன் தான் இருந்தார். அவரை போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை. போலிசார் விசாரிக்கும்போது எனது மாமனார் வீட்டில் இல்லை. சிதம்பரம் வாத்தியார் எங்கள் வீட்டிற்கு அருகில் குடியிருந்து வருகிறார். எதிரிகள் பாதை சம்மந்தமாக சிதம்பரம் வாத்தியார் மீது சிவில் வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியும். சம்பவம் நடக்கும்போது நான் குடியிருந்த வீட்டில் தற்போது நான் குடியிருக்கவில்லை. நான் குடியிருந்த வீட்டிற்கு செல்வதற்கான பாதையை தற்போது முழுவதுமாக மறைத்துவிட்டார்கள். நான் குடியிருந்து வந்த வீட்டை விற்கவில்லை. நான் ஏற்கனவே குடியிருந்து வந்த வீட்டை சிதம்பரம் வாத்தியாருக்கு விற்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சிதம்பரம் வாத்தியாருக்கு எதிராக எதிரிகள் சிவில் வழக்கு தாக்கல் செய்துவிட்டதால் எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் எனது கணவரை பயன்படுத்தி தாக்கல் செய்துள்ள பொய்யான வழக்கில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சிதம்பரம் வாத்தியார் வீட்டிற்கு மேற்கு பக்கம் காலி இடம் இருந்தது. அந்த இடம் அருணாசலம் வாத்தியாருக்கு சொந்தமான இடம் என்று சொன்னால் சரிதான். எனது கொழுந்தன் சித்தரகண்ணுவிற்கும் மேற்படி அருணாசலம் வாத்தியாருக்கும் இடையில் சொத்து சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்று

சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல் ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னாலும், எங்கள் குடும்பத்திற்கும் என்னுடைய கொழுந்தன் குடும்பத்திற்கும் இடையில் எங்களுக்குள் சொத்து பிரிப்பது தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டு அதில் எனதுகணவர் மற்றும் மாமியாருக்கு ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகளுக்கு எதிராக இந்த பொய் புகார் கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

Sd/– மாரிகண்ணு

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.